


**26. 04. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் விஞ்ஞானிகள் தேசத்தை கட்டமைப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி மனதின் குரல் நிகழ்ச்சியில் பாராட்டியுள்ளார்.

2. கோடை விடுமுறையை மாணாக்கர் முறையாக பயன்படுத்திக்கொள்ள பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

3. வாக்குப்பதிவு முடிந்து தென்மாவட்டங்களிலிருந்து சென்னை திரும்பும் பயணிகளின் வசதிக்காக சிறப்பு பேருந்துகள் இன்று இயக்கப்படுகின்றன.

4. மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் மீனாட்சி பட்டாபிஷேகம் இன்று இரவு நடைபெறுகிறது.

5. ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் – குஜராத் டைட்டன்ஸை இன்று எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

**************

மன்-கீ-பாத்

தமிழகத்தின் கல்பாக்கம் அணு உலை அதன் அணுக்கரு தொடர் வினையை வெற்றிகரமாக அடைந்து, தொடர்ந்து இயங்கும் நிலையை, முதல்முறையாக, எட்டியுள்ளது, நாட்டின் அணு விஞ்ஞானிகளின் திறனை உலகிற்கு எடுத்துரைப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் மன் கீ பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 133-ஆவது முறையாக இன்று உரையாற்றிய அவர், இந்தியாவின் அணுசக்தி பயணத்தில் இதுஒரு வரலாற்று மைல் கல் என்று கூறியுள்ளார்.

நாட்டின் விஞ்ஞானிகள் சிவில் அணுசக்தி திட்டத்தை முன்னெடுத்துச்செல்வதோடு தேசத்தை கட்டமைப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருவதாக கூறிய அவர், இது தொழில்துறை, எரிசக்தி, மற்றும் சுகாதாரத்துறைக்கு மிகுந்த பயனளித்துள்ளதாக கூறினார்.

விவசாயம் முதல், நவீன கண்டுபிடிப்பாளர்கள் வரை, அனைவருக்கும் உதவிகரமாக இது அமைந்ததாக அவர் குறிப்பிட்டார்.

காற்றாலை சக்தி குறித்து பேசிய அவர், காற்றாலை மின் உற்பத்தி திறன் தற்போது 56 ஜிகா வாட்டை தாண்டியுள்ளதாகவும் இது கடந்த ஆண்டை காட்டிலும் 6 ஜிகாவாட் அதிகம் என்றும் பிரதமர் கூறினார்.

காற்றாலை மின் உற்பத்தி திறனில் இந்தியா உலக அளவில் 4ஆவது இடத்தில் உள்ளதாக கூறிய பிரதமர், தமிழ்நாடு, மகராஷ்டிரா குஜராத் ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்கள் இத்துறையில் முன்னோடியாக திகழ்கின்றன என்றார்.

நாட்டின் வளர்ச்சிக்கு சூரியசக்தி மற்றும் காற்றாலை ஆற்றலின் அவசியத்தை எடுத்துரைத்த பிரதமர் மின்சாரத்தை சேமித்து தூய்மையான ஆற்றலை இதன்மூலம் பெற முடியும் என்றார்.

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த விழிப்புணர்வு ஒவ்வொரு இந்தியருக்கும் இருக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்த பிரதமர் மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த அனைத்து தகவல்களும் டிஜிட்டல் முறையில் பதிவுசெய்யப்படுவதாக கூறினார்.

இதற்கான பிரத்யேக மொபைல் செயலிமூலம் மக்கள், தங்களது தகவல்களை, தாங்களாகவே பதிவுசெய்துகொள்ளலாம் என்று குறிப்பிட்ட பிரதமர் கணக்கெடுப்பாளர்கள் அவர்களது வீடுகளுக்கு வருவதற்கு 15 நாட்களுக்கு முன்பே தகவல்களை மக்கள் இந்த செயலியில் உள்ளீடு செய்து கொள்ளமுடியும் என்றார்.

சுய கணக்கெடுப்பு பணிகள் முடிவடைந்த மாநிலங்களில் வீடுகள் குறித்த கணக்கெடுப்பு பணிகள் தொடங்கியுள்ளதாக கூறிய பிரதமர், இதுவரை சுமார் ஒருகோடியே 20 லட்சம் குடும்பங்களுக்கான வீடுகள் கணக்கெடுப்பு பட்டியல் முடிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பொதுமக்கள் வழங்கும் தகவல்கள் ரகசியமாகவும், டிஜிட்டல் பாதுகாப்புடனும் பராமரிக்கப்படும் என்று

உறுதியளித்த பிரதமர், பொதுமக்கள் தங்களது அடையாள எண்களின் மூலம் தகவல்களை சரிபார்க்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

2027 மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் அடுத்த ஆண்டிற்குள் வெற்றிகரமாக நிறைவடைய பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

தொழிலாளர் தினமான வரும் ஒன்றாம் தேதி புத்த பூர்ணிமா கொண்டாடப்பட உள்ளதை சுட்டிக்காட்டிய பிரதமர் உலக அளவில் தற்போது காணப்படும் பதற்றங்கள் மற்றும் மோதல் சூழலில் புத்தரின் போதனைகள் முக்கியத்துவம் பெற்றுள்ளதாக கூறினார்.

இயற்கையோடு இயைந்த வாழ்வு வன விலங்குகளுடனான மோதல்களை குறைக்க வழிவகை செய்யும் என்று கூறிய பிரதமர் வடகிழக்கு மாநிலங்களில் மூங்கில் வளர்ப்போர் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளதாக எடுத்துரைத்தார்.

வேலை வாய்ப்பு வணிகம் மற்றும் புத்தாக்கத்திற்கு மூங்கில் விவசாயம் புதிய உத்வேகம் அளித்து வருவதாக கூறிய பிரதமர், பிரிட்டிஷ் சட்டத்தின்படி மூங்கில் தொடர்புடைய விதிகள் தளர்த்தப்பட்டதன் மூலம் திரிபுரா, நாகலாந்து உள்ளிட்ட மாநிலங்களில் மூங்கில் சார்ந்த தொழில் வளர்ச்சி அடைந்து வருவதாக கூறினார்.

வடகிழக்கு மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படும் மூங்கில் பொருட்களை வாங்கி அவர்களை ஊக்குவிக்குமாறும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

இந்திய தேசிய ஆவண காப்பகம் 20 கோடிக்கும் மேற்பட்ட ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்கியுள்ளதாக கூறிய பிரதமர் இதில் 7ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கையெழுத்து பிரதிகள் 8ஆம் நூற்றாண்டை சேர்ந்த சுவாரஸ்யமான நூல்கள், ராணி லட்சுமிபாய் தொடர்பான முக்கிய கடிதங்கள், நேதாஜியின் வாழ்க்கை வரலாறு, பனாரஸ் ஹிந்து பல்கலைகழகம் மற்றும் ஹிந்தி சாகித்ய சம்மேளனம் நிறுவப்பட்டது, அரசியல் அமைப்பு தொடர்பான ஆவணங்கள் உள்ளிட்ட பல்வேறு ஆவணங்கள் உள்ளதாக கூறினார்.

பெண்கள் தற்போது உலக அளவில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வருவதாக கூறிய அவர், ஃபிரான்சின் போர்டெக்ஸ் நகரில் அண்மையில் நடைபெற்ற கணித ஒலிம்பியாட் போட்டியில் 6ஆம் இடத்தை பிடித்த இந்திய மகளிர் அணிக்கு பாராட்டு தெரிவித்தார்.

நாட்டின் பால்வளத்துறை வளர்ச்சி அடைந்துள்ளதாக கூறிய பிரதமர், பிரேசிலில் நடைபெற்ற சர்வதேச பாலாடை கட்டி தொடர்பான போட்டியில் இரண்டு இந்திய நிறுவனங்கள் விருதுபெற்றது பெருமை அளிப்பதாக தெரிவித்தார்.

வரும் 9ஆம் தேதி ரவீந்திரநாத் தாகூரின் பிறந்த தினம் கொண்டாடப்பட உள்ளதை அடுத்து பிரதமர் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினார்.

மாணாக்கர் கோடை விடுமுறையை முறையாக பயன்படுத்தி புதிய விஷயங்களை அறிந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்திய பிரதமர் கோடை வெயிலின் தாக்கத்திலிருந்து பொதுமக்கள் தங்கள் உடல் நலனை பாதுகாத்து கொள்ளவும் அறிவுறுத்தினார்.

**************

மேற்குவங்கம்

மேற்கு வங்கத்தில் 142 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு வரும் 29ஆம் தேதி நடைபெறும் இரண்டாவது இறுதி கட்ட வாக்குப்பதிவிற்கான பிரச்சாரம் நாளை மாலையுடன் நிறைவடைவதால் அரசியல் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு.நரேந்திரமோடி போங்கான், ஹூக்லி மாவட்ட பொதுக்கூட்டங்களில் இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தலைவரும், அம்மாநில முதலமைச்சருமான செல்வி மம்தா பானர்ஜி பவானிபூரில் நடைபெறும் பேரணிகளில் வாக்கு சேகரிக்கிறார்.

**************

LPG

நாடுமுழுவதும் பெட்ரோலிய பொருட்கள் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஆன்லைன் LPG சிலிண்டர் முன்பதிவுகள் 99 சதவிகிதத்தை எட்டியுள்ளதாகவும், அதே நேரத்தில் OTP அடிப்படையிலான விநியோகங்கள் 94.5 சதவிகிதத்தை தாண்டியுள்ளதாகவும் அமைச்சகம் கூறியுள்ளது.

நாட்டில் கூடுதலாக 2 லட்சத்து 61 ஆயிரம் இணைப்புகளுக்கான உள்கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் மொத்த இணைப்புகளின் எண்ணிக்கை 7 லட்சத்து 97 ஆயிரமாக உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**************

பேருந்து

சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவை தொடர்ந்து தென்மாவட்டங்களிலிருந்து சென்னை திரும்பும் பயணிகளின் வசதிக்காக 3 ஆயிரத்து 184 சிறப்பு பேருந்துகள் இன்று இயக்கப்படுகின்றன.

வாக்குப்பதிவிற்காக சொந்த ஊர் சென்றவர்கள் மீண்டும் சென்னை திரும்பும் வகையில் வழக்கமாக இயக்கப்படும் 2 ஆயிரத்து 92 பேருந்துகளுடன் கூடுதலாக இப்பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

பயணிகளின் கூட்ட நெரிசல் காரணமாக திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அரசுபேருந்துகள் மற்றும் வாகன போக்குவரத்து அதிகரித்து காணப்படுகிறது.

பல்வேறு பகுதிகளில் போக்குவரத்து காவல்துறையினர் போக்குவரத்து நெரிசலை சீர் செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

**************

பட்டாசு

பட்டாசு ஆலைகளில் ஏற்பட்ட தொடர் விபத்துகளை அடுத்து மத்திய அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இதன்படி பட்டாசு மூலப்பொருட்களை கலவை செய்யும் பணிகள் காலை 6 மணிமுதல் 10 மணிக்குள் முடிக்கப்பட வேண்டும், தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் உள்ளிட்டவைகளை பின்பற்ற அறிவுறுத்தியுள்ளது.

வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் பட்டாசு விபத்துகளை தடுக்க இந்நடவடிக்கை.

இதனிடையே விருதுநகர் மாவட்டத்தில் அண்மையில் நேரிட்ட வெடி விபத்து தொடர்பாக தமிழக அரசின் தலைமை செயலாளர் மற்றும் விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு தேசிய மனித உரிமைகள் ஆணையம் நோட்டிஸ் அனுப்பியுள்ளது.

**************

கோதுமை

நாட்டின் சில பகுதிகளில் வானிலை தொடர்பான சவால்கள் இருந்த போதிலும், அரசு எடுத்த வலுவான நடவடிக்கையால் 2025-26ஆம் ஆண்டு கோதுமை பருவம் சிறப்பாக அமைந்துள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெளிவுபடுத்தியுள்ளது.

கோதுமை உற்பத்தி நிலவரம் குறித்த சில ஊடக அறிக்கைகளுக்கு பதில் அளிக்கும் விதமாக இன்று அறிக்கை வெளியிட்ட அமைச்சகம் 33.4 மில்லியன் ஹெக்டேருக்கும் அதிகமான பரப்பளவில் பயிர் விதைக்கப்பட்டதாகவும்

இந்தபருவத்தில் பெரிய பூச்சி தொல்லைகளோ, நோய்களோ ஏற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

இருப்பினும் பிப்ரவரி மாதத்தில் நிலவிய அசாதாரண அதிக வெப்பநிலையால் பயிர் வெப்ப அழுத்தத்திற்கு உள்ளானதாகவும், இது தானியங்கள் முதிர்ச்சி அடையும் காலத்தையும் மகசூலையும் குறைத்தது எனவும் கூறியுள்ளது.

சில பகுதிகளில் பெய்த பருவம் தவறிய மழை, ஆலங்கட்டி மழை, தானியத்தின் தரம் மற்றும் உற்பத்தியில் பாதிப்பை ஏற்படுத்தியதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இருப்பினும் 0.6 மில்லியன் ஹெக்டேருக்கும் அதிகமான சாகுபடி பரப்பு விரிவாக்கத்தால் உள்ளூர் இழப்புகள் ஈடு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதிகரித்த சாகுபடி பரப்பு, மேம்படுத்தப்பட்ட விவசாய முறைகள், சிறந்த விதை ரகங்களின் ஆதரவுடன் நடப்பாண்ட ஒட்டுமொத்த கோதுமை உற்பத்தி நிலையாக உள்ளதாக அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது.

**************

வன அமைச்சகம்

சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமும் – தேசிய பல்லுயிர் ஆணையமும் இணைந்து தமிழ்நாடு மற்றும் மேகாலயாவில் செயல்படுத்தப்படும் ஐந்தாண்டு திட்டத்தில் உள்ளூர் நிறுவனங்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுவதாக மத்திய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கிராம பஞ்சாயத்து திட்டங்களில் பல்லுயிர் பாதுகாப்பை ஒருங்கிணைப்பதன் மூலமும், புதுமையான நிதி வழிமுறைகளை ஊக்குவிப்பதன் மூலமும் இது செயல்படுத்தப்படுகிறது.

இதன்மூலம் தமிழ்நாட்டில் முதுமலை சத்தியமங்கலம் உள்ளிட்ட வன பகுதிகளில் சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பரப்புகளின் மீது கவனம் செலுத்தப்படுகிறது.

**************

நீலகிரி தீ

நீலகிரி வன கோட்டத்திற்குட்பட்ட பார்சன்ஸ் வேலி, பைக்காரா வன பகுதியில் ஒருவாரகாலமாக நீடிக்கும் காட்டுத்தீயை கட்டுப்படுத்தும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**************

மதுரை

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான மீனாட்சி பட்டாபிஷேகம் இன்று இரவு நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**************

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் சென்னையில் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் – குஜராத் டைட்டன்ஸை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இரவு ஏழரை மணிக்கு லக்னோ சூப்பர் ஜெயன்ஸ் கொல்கத்தா நைட்ரைடர்ஸூடன் மோதுகிறது.

**************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது